ஆராய்ச்சியாளர்களிடம் அந்த மருந்தின் தன்மையை ஆராயும்படி கேட்டோம். அவர்களுடைய ஆராய்ச்சியில் அந்தப் பலன் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதேபோல், பாம்பு கடித்தால் வாழைப்பட்டையை நசுக்கி வாயிலே கொடுத்தால் பாம்புக் கடியின் விஷம் இறங்கிவிடும் என்று தெரிவித்தார்கள். இந்த முறையையும் அலோபதி ஆராய்ச்சியில் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனல் செயல்முறையில் ஏதோ பலன் இருப்பதாகக் காணப்படுகிறது. அதை மேலும் ஆராய்ச்சியில்தான் கண்டுபிடிக்க வேண்டும்.

அதேபோல் கருத்தடை மருந்தை ஏற்றுக்கொள்வதில் பல்வேறு துறைகளில் உள்ளவர்கள் ஆராய்ந்து ஒப்புக்கொள்ள வேண்டும். அதன் பின்னர்தான் அது நாடு முழுவதற்கும் பயன்பட ஏதுவாக இருக்கும்.

Investigation charges for water supply schemes.

* 459 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of the Government to reduce the investigation charges collected by the water Board from the Minor Panchayats for the Drinking Water Supply Schemes?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது குறித்து தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரியம் பரிசீலனை செய்து வருகிறது.

(முற்பகல் 9·30.)

திரு. ஆ. பரந்தாமன் : ஊராட்சிமன்றங்கள் குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று வாரியத்தைக் கேட்டால் 5,000, 10,000, 20,000 ரூபாய் என்று இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கேட்கிருர்கள். பெரும்பாலான ஊராட்சி மன்றங்களிடத்தில் அந்த அளவிற்கு நிதி வசதி இல்லை. அப்படி ஒருவேளை ஊராட்சிமன்றங்கள் தந்தாலும் சில நேரங்களில் குடிநீர் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே, ஒன்று இந்தக்கட்டணத்தை அடியோடு எடுத்துவிட வேண்டும் அல்லது குறைத்து விடவேண்டும் என்று இந்த அரசு யோசனை சொல்லுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் கட்டணம் உறுப்பினர்கள் அவர்கள் கேட்டதுபோல் ஒரு குத்துமதிப்பாக 5,000, 10,000, 20,000 ரூபாய் என்று கொடு என்று கேட்கிற முறையில் வைக்கப்பட்ட கட்டணம் அல்ல. இந்தக் கட்டணத்திற்கு சில முறைகள் இருக்கின்றன. அதில் பணியாற்றக் கூடியவர்களுக்கு மூன்று மாதம் சம்பளம், நிலஅளவை சமப்படுத்துதல் முதலியவற்றிற்கான மொத்த நிதி ஒதுக்கம் பெஞ்ச் மார்க், கற்களைப் போடுவதற்கும் சோதனைக் குழிகளை வெட்டுவதற்கான மொத்த நிதி ஒதுக்கம், பயணப்படி, அலுவலக வாடகை, எழுதுபொருள், ஆகியவற்றிற்கான மொத்தநிதி ஒதுக்கம், $7\frac{1}{2}$ சதவிகிதம் சென்டேஜ்

கட்டணம், மாதம் ஒன்றுக்கு ரூ. 1,300 என்ற விகிதத்தில் கோட்டம், உட்கோட்டம் இவற்றின் பணியாளர் அமைப்பிற்கான விகிதாசாரச் செலவு ஜீப் வண்டிக்கான செலவு என்று முறைப்படுத்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பஞ்சாயத்து ஐயாயிரம் ரூபாய் செலுத்த முடியும் என்றிருந்தால் அது பத்தாயிரம் என்று வரும்போது அந்தப் பஞ்சாயத்திற்கு இடர்ப்பாடு வரலாம். ஆகவே இந்தக் கட்டணத்தை ஏதாவது குறைத்து அமைக்க முடியுமா அல்லது எந்த அளவிற்குப் பஞ்சாயத்துக்களின் தாங்கும் சக்திக் கேற்ப அமைக்க முடியும் என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. சக்திக்கேற்ப கட்டணத்தைத் தருவதை பஞ்சாயத்துக்கள் வரவேற்கும் என எதிர்பார்க்கிறேன்.

திரு. மு. இரத்தினசபாபதி : 1974–75-ம் ஆண்டுக்கு கிராமக் குடிநீர் வழங்குவதற்காக இரண்டரைக்கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது கிராமங்கள் இந்த இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ்க்கே பணம் கொடுக்க முடியவில்லை என்ற நிலை இருக்கும்போது இந்தப் பணத்தைச் செலவழிக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே கிராமங்களுக்கு இந்த இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸை அறவே இல்லாமல் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஏற்கனவே இன்வெஸ்டிகேஷன் முடிந்திருப்பது ரூ. 15 கோடி. இரண்டரைக் கோடி ரூபாயை செலவழிக்க முடியாது என்ற நிலை வராது. வேகமாகச் செயல்பட வேண்டுமென்று விரும்புகிறோம். அந்த அளவிற்கு நிதி கிடைப்பதில்தான் இன்றைக்கு இடர்ப்பாடு இருக்கிறதே தவிர பணியாற்றுகிற வேகம் தடைப்படுகிறது என்று கருதவில்லை. ஆகவே, வசதி இல்லாத பஞ்சாயத்துக்களுக்கு எந்தளவிற்கு உதவி செய்ய முடியும், மக்கள் தொகை அடிப்படையில் விகிதாச்சாரத்தை, கட்டணத்தை வைப்பதன் மூலம் இந்தத் தொகையைக் குறைக்க முடியுமா என்பதைப் பரிசீலனை செய்யலாம்.

கல்லணைப் பாலம்.

* 460 வினா.—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்லணையில் அமைந்துள்ள காவிரிப் பாலத்தை பேருந்துகள் செல்லுகின்ற வகையில் அகலப்படுத்துகின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் : இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : அணையின் அடித்தளத்தை பல லட்சம் ரூபாய் செலவு செய்து அரசு பலப்படுத்திக் கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதேபோல் மேல்பகுதியையும் விரிவுபடுத்தி திருச்சியிலிருந்து வருகிற பேருந்துகள் திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு செல்வதற்கு வசதியான முறையில் அந்த மேல் பகுதியை அகலப்படுத்த மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா ?